

திரு.வி.க நகர் சட்டமன்ற தொகுதி: 72'அ'வது வட்டக் கழக அவைத் தலைவர் ந. வேலுவின் மருமகன் மறைந்த மணிகண்டன் அவர்களின் 16ஆம் நினைவு நாள் நிகழ்வில் திரு.வி.க.நகர் வடக்கு பகுதி செயலாளர் செ.தமிழ்வேந்தன் தலைமையில் கழக துணை அமைப்புச்செயலாளர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி அன்னாரது திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் 72வது மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் மு.சரவணன், வட்டக் கழகச் செயலாளர் அபோய் முன்னாள் இளைஞர் அணி பகுதி அமைப்பாளர் மணிமாறன், வழக்கறிஞர்கள் வெங்கடேசன் ,அரவிந்தராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் தலைமையில்!

காஞ்சிபுரம், அக். 17- காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள பிரிக்கப்பட்ட கழக மாவட்டங்களின் அடங்கிய ஒன்றியம் நகரம் பகுதி வட்ட கிளைக் கழகங்கள் கழக அமைப்புகள் மறுசீராய்வு விதிகளின் படி பிரித்ததற்கு ஒப்புதல் தெரிவித்து மாவட்ட செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் குன்றத்தூர் அறிஞர் அண்ணா திருமண மண்டபத்தில் கழக தீர்மானக் குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

கழக மறுசீரமைப்பு குழு தலைமைக் கழகப் பிரதிநிதிகள் சி.என்.அண்ணாதுரை எம்.பி., கோவி. லெனின் என். மருது கணேஷ், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், து.மூர்த்தி மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



மாவட்ட செயலாளர் தா.மோ.அன்பரசன் வரவேற்று பேசினார்.

தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜி.சி.அன்புச்செழியன், க. அன்புச் செல்வன், ஆதிமாறன், பகுதி செயலாளர்கள் என். சந்திரன், ப.குணாளன், வே. கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, த.ஜெயக்குமார், பெருங்களத்தூர் சேகர், மாடம்பாக்கம் நடராஜன், ஏ.கே.கருணாகரன், இரா.சுரேஷ், இ.எஸ். பெர்னாட்,

ஒன்றியச் செயலாளர்கள் ந.கோபால், எஸ்.டி. கருணாநிதி, பையனூர் எம்.சேகர், ஏ.வந்தேமாதரம், ஜி.கே.ரவி, ஆப்பூர் பி.சந்தானம், எம்.டி.லோகநாதன், திருமுடிவாக்கம் இ.மணி, கே.பி.ராஜன், நகரச் செயலாளர்கள் டி. பாபு, ஜெ.சண்முகம், எஸ். ஜபருல்லா, கோ. சத்தியமூர்த்தி, எம்.கே.டி.கார்த்திக், ஆர்.சதீஷ்குமார், பேரூர் செயலாளர் ஜி.டி.யுவராஜ், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் இரா. பொன்னுராம், அ. தமிழ்மாறன், சாய் ஜெயகாந்த் பாரதி, ஆர்.எஸ்.கிருத்திகா தேவி, தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் எம். எஸ்.கே.இப்பிராகிம், ஆர். டி.பூபாலன், கே.எத்திராஜ், க.தேவேந்திரன், ஆர்.எஸ். சங்கர், இரா.பாஸ்கரன், சே.அருள்தேவி, மு.ரஞ்சன், செல்வகுமார், ஜிஜேந்திரன் ராமு,

கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கோல்டு டி.பிரகாஷ், தையூர் வீ.விஜயகுமார், டி.கே.கமலகண்ணன், எல். பிரபு, உதயா கருணாகரன், எஸ்.ஆல்பர்ட், தி.க.பாஸ்கரன், சசிகலா, பொன்.ரமேஷ்கவி, ஜான் தினகரன், ஆர்.கோவிந்தன், டி.எஸ்.எம்.ஜெயகரன், எஸ்.கார்ணன், டி.ஆர். சாரதி பெரியநாயகம், பெப்சி கண்ணன், முகலிவாக்கம் தங்கம் வாட்ஸ், ஆர்.ஆர்.ஜெயராம்மார்த் தாண்டம், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்திய பிரபு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

நடைபெற்று முடிந்த மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிட்ட நமது கழக வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் அவர்களுக்காக, நமது காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட 10 ஊராட்சிகளில் அடங்கிய 24 பூத்களில் இரவு பகல் பாராமல் தேர்தல் களப்பணியாற்றி நம் முடைய மாவட்டத்தில் உள்ள முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஒன்றிய நகர பகுதி பேரூர் கழகச் செயலாளர்கள், இளைஞர் அணி மாணவர் அணி தகவல் தொழில் நுட்ப அணி உள்ளிட்ட கழக அணிகளின் மாவட்ட நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவருக்கும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



அறிவுசார் உலகம் அமைக்க வேண்டும் என்ற நோக்கில் கோவை மாநகரில் " பெரியார் அறிவுலகம் அமைத்துத் தந்த கழக தலைவர், எந்நாளும் மக்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் மேற்கு மண்டல பொறுப்பாளர், கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி வழிகாட்டுதலின்படி கோவையின் பெருமைமிகு இந்த அடையாளத்தை கொண்டாடும் வகையில் கோவை மாநகர் மாவட்ட பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் தலைமையில் திருப்பூர் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி, கோவை வடக்கு மாவட்ட செயலாளர் தொ. அ.ரவி, கோவை தெற்கு மாவட்ட செயலாளர் தளபதி முருகேசன் ஆகியோர் முன்னிலையில் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினர். இதில் கோவை மாவட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

மாதவரம் வடபெரும்பாக்கத்தில் 1931-ஆம் ஆண்டு துவங்கப்பட்ட

அரசு ஆதிதிராவிடர் நல துவக்கப் பள்ளியை மூட முயற்சி - மாணவர்கள், பெற்றோர்கள் அதிர்ச்சி!

புழல் எம். நாராயணன் தலைமையில் கழகத்தினர் தடுத்து நிறுத்தினர்!

மாதவரம், அக்.17

சென்னை மாதவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 17-வது வட்டம் வடபெரும்பாக்கம் சின்னத்தோப்பு பகுதியில் அமைந்துள்ளது அரசு ஆதிதிராவிடர் நல துவக்கப்பள்ளி. 1931 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட இப்பள்ளியில் ஒன்று முதல் மூன்று வகுப்புகள் இருந்தன. அதன் பிறகு ஐந்தாம் வகுப்பு வரை நடைபெற்று வருகின்ற இந்த பள்ளியில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் வடபெரும் பாக்கம், சின்னத்தோப்பு, விநாயகபுரம், செட்டி மேடு ஆகிய சுற்றுவட்டார பகுதியில் இருந்து படித்து வந்தனர், காலப்போக்கில் தனியார் பள்ளிகள் ஆரம்பித்த காரணத்தினால் பொதுவாக மாணவர்களுடைய எண்ணிக்கை குறைந்து வந்தது,

இந்த நிலையில் கடந்த திராவிட மாடல் அரசில் தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்திரவின் பேரில் இந்த பள்ளியில் கட்டிடங்கள் சீரமைக்கப்பட்டு மாணவர் செல்வங்கள் தொடர்ந்து பள்ளிக்கு அதிகப்படியாக வர ஆரம்பித்தனர், தற்பொழுது இந்த பள்ளியில் குழந்தைகள் 21 பேர் படித்து வந்த சூழ்நிலையில் ஆட்சி மாற்றத்தினால் பள்ளி பராமரிப்பு பணிகள் சரிவர நடைபெறாத காரணத்தினால் பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புவதை குறைத்த காரணத்தினால் இந்த பள்ளியை இழுத்து மூட ஆளும் த.வெ.க. அரசு முடிவு செய்துள்ளதாக தெரிகிறது.

இந்த பள்ளியில் உள்ள ஆசிரியர் ஒருவர் மாணவர்களிடம் இனிமேல் பள்ளிக்கு வராதீர்கள், வெள்ளிக்கிழமை முதல் பள்ளி இயங்காது பக்கத்தில் இருக்கக்கூடிய மாநகராட்சி பள்ளிகளில் சேர்ந்து கொள்ளுங்கள் என்று கூறியிருக்கிறார். தகவல் அறிந்த பெற்றோர்கள் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் அவர்களுக்கு முறையிட்டனர்.

பள்ளிக்கு நேரடியாக சென்ற பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன், வட்டச் செயலாளர் கே. கருணாகரன் மற்றும் நிர்வாகிகள் பள்ளி ஆசிரியரிடம் இது குறித்து விசாரித்த போது, மாணவர்களின் வருகை குறைவாக உள்ள காரணத்தினால் வேறு பள்ளியில் சேர்க்க சொல்லி மாவட்ட கல்வி துணை அலுவலர் உத்தரவு என்று தெரிவித்தனர். தகவல் தெரிந்த பொதுமக்கள் பள்ளியை முற்றுகையிட்டனர்.

அதன் பின்னர் புழல் எம். நாராயணன் அவர்கள் சென்னை பெருநகராட்சி மேயர் பிரியா ராஜன் மற்றும் மாவட்ட பள்ளி கல்வி துணை அலுவலர், மணலி மண்டல செயற்பொறியாளர் ஆகியோரின் தொலைபேசி தொடர்பு கொண்டு பள்ளி நிலவரத்தை விளக்கி இனிவரும் காலங்களில் பள்ளியில் குழந்தைகள் சேர்க்கும் விகிதத்தை அதிகப்படுத்தும் வகையில் பேரணிகள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் ஏற்படுத்தி சரி செய்து தருவதாக உறுதி அளித்ததன் பேரில் தொடர்ந்து இந்த பள்ளி அங்கேயே இயங்க பள்ளி கல்வி துணை இயக்குனர் உத்தரவிட்டதாக தெரிவித்தார்.

17-வது வார்டு உதவி பொறியாளர் தினேஷ் அவர்கள் நேரில் வருகை தந்து ஆசிரியர்களிடத்தில் பேசி தொடர்ந்து பள்ளியை நடத்துமாறு அறிவுறுத்தினார்.

தி.மு.க. நிர்வாகிகள் டி. திவாகர், எம். மைக்கேல், பி. செந்தில், வக்கீல் எழிலன், சதீஷ்குமார், மோகன் ராஜ் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

நூற்றாண்டு நெருங்கும் ஒரு பள்ளிக்கூடத்தை இழுத்து மூட உத்தரவிட்ட த.வெ.க. அரசுக்கு பொதுமக்கள் தங்களது கண்டனத்தை தெரிவித்து வருகின்றனர்.

ஏதும் இல்லை!

இல்லையோ
இல்லை!
இந்த
"machine made"
ஆட்சியிடம்..
இதயம்
இல்லை
இரக்கம்
இல்லை
மூளையும்
இல்லை
மூளைக்கு
வேலையும்
இல்லை
விலங்கின்
மொழி
விசிலுக்கு
வெறியாட்டம்
போடும்
அரை வேக்காட்டு
ஆட்சியில்
கார்மேகப்
பொழிவும்
இல்லை
காவிரியில்
நீரும்
இல்லை
கரண்ட்டும்
இல்லை...
கட்டணக்
கொள்ளைக்கு
அளவும்
இல்லை
கடுகு பருப்பு
அரிசி
எண்ணெய்
அத்தனை



பொறுப்பை
உணர்த்த
ஒருத்தனும்
சுத்தி
இல்லை
அறிவியல்
தமிழோடு
ஆயிரம்
மொழிகள்
விலையும்
எகிறுது
எல்லை
எதற்கும்
இங்கே
கடிவாளம்
இல்லை
கட்டுப்பாடு
இல்லை
சட்டம் ஒழுங்கு
சுத்தமா
இல்லை
சந்தி சிரிக்குது
சதா
கொலையோடு
கொள்ளை...
பாட்டிலுக்கும்
யூனிட்டுக்கும்
பகல் கொள்ளை
அதுக்கு
பஞ்சாப்பை
பாருங்குது
அந்த
"பைத்தியத்"
தொல்லை
பொட்டு
மாமாவுக்கு
புத்தி
இல்லை
அவனியில்
இருக்க
காட்டு மிராண்டி
காலத்தைப்
போல
இந்த சத்துக்
குறைபாடு
கும்பலுக்கு
சதா
சைகை காட்டி
அலைவதன்றி
வேறு
சரக்கு மிடுக்கு
ஏதும் இல்லை...
ஆம்....
இந்த
தத்திகளை
விமர்சிக்க
இனி
கமெண்ட்டும்
இல்லை
தகலி
தலைமைச்
செயலகத்தில்
கரண்ட்டும்
இல்லை...
என்ன நாஞ் சொல்றது!



மருது அழகுராஜ்
கழக செய்தித் தொடர்புக் குழுத் துணைத் தலைவர்

33 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தஞ்சைப் பெரியார், முன்னாள் அமைச்சர்

மன்னை ப.நாராயணசாமி

அவர்கள்

17.10.2026



"எறும்பனையர் எம் மறவர்
இன்னனையர் நம் மன்னை"
– பேரறிஞர் அண்ணா

"மன்னை எனது அன்னை"
– முத்தமிழ் அறிஞர்
கலைஞர்

..... என்றும் உங்கள் வழியில் பேரன் .....

மன்னை த.சோழராஜன் B.E.,

நகர்மன்றத் தலைவர் – மன்னார்குடி

(மாநில மாணவர் அணி துணைச் செயலாளர்)